
# 70 செண்ட் நிலத்தில்… ஆண்டுக்கு ரூ.3 லட்சம் சத்தான வருமானம் தரும் சம்பங்கி

## 25.08.2013



ஒவ்வொரு விவசாயியும் தனது நிலத்தில் வருட வருமானம், மாத வருமானம், வார வருமானம், தினசரி வருமானம் என்று கிடைக்குமாறு கலப்புப் பயிர்களை சாகுபடி செய்தால் நஷ்டம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது தான் காலகாலமாக விவசாயப் பொருளாதார வல்லுநர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. இதை நிரூபிக்கும் விவசாயிகளும் இங்கே நிறைய உள்ளனர். அந்த வகையில், தினசரி வருமானம் கொடுக்கும் பயிர்களில் முதலிடத்தில் இருப்பது மலர்கள். சம்பங்கி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு தினசரி வருமானத்திற்கு பஞ்சமே இல்லை. அதனால்தான் பலரும் சம்பங்கி சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களில் ஒருவர்தான், விருதுநகர் மாவட்டம், கிருஷ்ணன் கோவில் அருகே உள்ள ரெங்கப்ப நாயக்கர்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விஜயரங்கன்.

சம்பங்கி பூ விவசாயம் செய்த யாருக்குமே நஷ்டம் ஏற்பட்டதில்லை. இதில் வேலையும் குறைவு. தினசரி வருமானமும் கிடைக்கும். என்ன பயிர் தோட்டத்தில் இருந்தாலும் குறைந்த இடத்திலேயே சம்பங்கி சாகுபடி செய்யலாம் என்கிறார் விஜயரங்கன்.

இவர் பரம்பரை விவசாயி. இவருக்கு 6 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 5 ஏக்கரில் கொய்யவும், 70 செண்ட் நிலத்தில் சம்பங்கியும் போட்டிருக்கிறார். ஆரம்பத்தில் கொய்யாவுக்கு ரசாயன உரங்களைத் தான் போட்டுள்ளார். ஒரு முறை கையில் காசு இல்லாமல் உரம் போடாமல் விட்டு ஆட்டு எரு, மாட்டு எரு போட்டு தண்ணீர் மட்டும் பாய்ச்சியுள்ளார். இரசாயன உரங்கள் போடாததால் பெரிய அளவு காய்ப்பு இருக்காது நினைத்த போது அந்த வருடம் நிறைய காய்த்தது. அன்று முதல் இன்று வரை இயற்கை விவசாயம்தான் என்கிறார் விஜயரங்கன்.

மருத முத்துவின் சம்பங்கி சாகுபடி பற்றி அறிந்து அவரை சந்தித்தார் விஜயரங்கன். சம்பங்கி சாகுபடி பற்றி தெளிவாக கற்றுக் கொண்டு ‘பிரஜ்வல்’ ரக விதைக் கிழங்கை அவரிடம் இருந்து பெற்று சம்பங்கி சாகுபடி தொடங்கினார். சம்பங்கி சாகுபடியில் மாதம் 50,000 ரூபாய் வருமானம் கிடைப்பதாக கூறுகிறார். 70 செண்ட் நிலத்தில் சம்பங்கி சாகுபடி செய்யும் விதம் பற்றி விவரித்தார் விஜயரங்கன்.

### அடியுரமாகச் செடிகள்

‘பிரஜ்வல்’ ரக சம்பங்கி வீரிய ரகம் என்பதால், அனைத்துப் பட்டங்களிலும் நடவு செய்யலாம். 70 சென்ட் நிலத்தில் சம்பங்கி சாகுபடி செய்ய, 9 டன் அளவுக்கு ஆட்ட எரு, மாட்டுச் சாணம், மட்கியக் குப்பைகள் எனக் கலந்து நிலத்தில் இறைத்து, இரண்டு உழவு செய்ய வேண்டும். பிறகு, 8 கிலோ தக்கைப் பூண்டு, 4 கிலோ தட்டைப் பயறு விதைகளை ஒன்றாகக் கலந்து, விதைத்து உழவு செய்து ஒரு சென்ட் அளவுக்கு ஒரு பாத்தி என அமைத்துக் கொண்டு, வாரம் ஒரு பாசனம் செய்து வர வேண்டும். 40 நாட்களுக்குள் அவை பூக்கும் நேரத்தில் ரோட்டோவேட்டர் மூலமாக அவற்றை அடித்து, மண்ணோடு மண்ணாக்கி விட வேண்டும். மறுநாள், ஒரு சென்ட் நிலத்துக்கு 3 கிலோ என்ற கணக்கில் வேப்பம்பிண்ணாக்கை இட்டு உழவு செய்ய வேண்டும். மறுநாள், இரண்டரை அடி அகலம், இரண்டு அங்குல உயரம் என்ற அளவில் மேட்டுப் பாத்திகள் அமைக்க வேண்டும். ஒவ்வொரு பாத்திக்கும் இரண்டடி இடைவெளி இருக்க வேண்டும்.

### ஒரு சென்டக்கு மூன்று கிலோ கிழங்கு

ஒரு சென்ட் நிலத்திற்கு 3 கிலோ என்ற கணக்கில் சம்பங்கி விதைக்கிழங்கை வாங்கி அவற்றை ஜீவாமிர்தக் கரைசலில் ஒரு மணி நேரம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும். பாத்தியில், மண்வெட்டி அல்லது களைக் கொத்தியால் நான்கு விரல் (2 அங்குலம்) ஆழத்திற்குப் பறித்து ஒரு குழிக்கு ஒரு கிழங்கு வீதம் முளைப்புப் பகுதி மேல் நோக்கி இருக்குமாறு செங்குத்தாக நடவு செய்ய வேண்டும். இரண்டரை அடி இடைவெளியில் பாத்தியின் ஒரு கரையில் இரண்டு கிழங்குகளும் அவற்றுக்கு நேர் எதிரில் பாத்தியின் மறு கரையில் ஒரு கிழங்கும் இருக்குமாறு, முக்கோண நடவு செய்ய வேண்டும்.

### சொட்டு நீர்ப் பாசனம் சிறந்தது

மேட்டுப்பாத்தி அமைத்து, சாகுபடி செய்ய சொட்டுநீர்ப் பாசனம்தான் சிறந்தது. நிலத்தின் தன்மையைப் பொருத்து வாரத்துக்கு ஒரு முறையோ அல்லது பத்து நாட்களுக்கு ஒரு முறையோ பாசனம் செய்தால் போதுமானது. மாதம் ஒரு முறை 150 லிட்டர் ஜீவாமிர்தத்தை பாசன நீருடன் கலந்து விட வேண்டும். நடவு செய்த 12-ம் நாள் முளைப்பு எடுக்கும். 30-ம் நாள் தோகையை வெளியே தள்ளி நிலத்தில் படர்ந்து விரியும். 60-ம் நாள் படர்ந்துள்ள தோகைக்கு நடுவில் செங்குத்தாக உயரமாகத் தண்டோடு சேர்த்து மொட்டு வரும். அந்தச் சமயத்தில், 100 கிலோ வேப்பம் பிண்ணாக்கு, 100 கிலோ ஆமணக்குப் பிண்ணாக்கு ஆகியவற்றைக் கலந்து ஒவ்வொரு செடியின் வேருக்குப் பக்கத்திலும் கையால் குழி தோண்டி ஒரு கைப்பிடி அளவு வைத்து, மண்ணால் மூடி விட வேண்டும்.




### நோய்த் தாக்குதல் இல்லை

90-ம் நாளில் பூக்கள் பூக்க ஆரம்பிக்கும். ஆரம்பத்தில், 70 சென்ட் நிலத்தில் இருந்து தினமும் 2 கிலோ வரை பூக்கள் கிடைக்கும். நடவு செய்த ஆறாவது மாதத்திற்குப் பிறகுதான், மகசூல் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கும். தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மூன்று டிராக்டர் அளவுக்கு தொழுவுரம் இட வேண்டும். நன்கு பூக்க ஆரம்பித்த பிறகு, 70 சென்ட் நிலத்தில், தினமும் 30 கிலோ முதல் 50 கிலோ வரை மகசூல் இருக்கும். இயற்கை முறையில் சாகுபடி செய்வதால், கிழங்கு அழுகல் நோய், வேர்ப்புழுத் தாக்குதல், மொட்டுத் துளைப்பான் போன்றவை வருவதில்லை. பூக்களும் தரமாக இருக்கும்.

### ஊடுபயிரில் கூடுதல் லாபம்

சாகுபடியைப் பற்றி முடித்த விஜயரங்கன், ஒரு தடவை சம்பங்கியைப் நடவு செய்தால் இருபது வருடத்திற்கு மேல் மகசூல் கிடைக்கும் என்று சொல்வார்கள். ஆனால், ஐந்து வருடம் மகசூல் கிடைத்தாலே போதும் என்கிறார் இவர். அதுவும் இயற்கை முறையில் விவசாயம் செய்வதால் கட்டாயம் ஐந்து வருடம் இதில் மகசூல் கிடைக்கும் என்கிறார்.
இயற்கை முறையில் பூவோட நுனியில் சிவப்பு நிறம் கம்மியாக இருக்கும். ரசாயன உரம் போட்டால் சிவப்பு நிறம் அதிகமாக இருக்கும். சம்பங்கி வயலில் ஆரம்பத்தில் ஊடுபயிர் சாகுபடியும் செய்யலாம். இவர் சம்பங்கி நட்ட உடனேயே, சின்ன வெங்காயத்தை விதைத்து, 70 நாட்களில் அறுவடை செய்துள்ளார். இதற்கென்று தனியாக எந்தச் செலவும் செய்யவில்லை. மொத்தம் 24 மூட்டை வெங்காயம் மகசூல் கிடைக்கும். ஒரு மூட்டை 1,000 ரூபாய் என்று விற்றதில் 24 ஆயிரம் ரூபாய் கிடைக்கும்.

### ஒரு நாளைக்கு 1,500 ரூபாய்

2012-ம் வருடம் ஜ%ன் 16-ம் தேதி சம்பங்கி நடவு செய்தார். அந்த வருடம் டிசம்பர் மாதம் 15-ம் தேதியில் இருந்து பூ ஓரளவுக்கு கிடைக்க ஆரம்பித்தது. இந்த வருடம் ஜ%ன் மாதம் வரைக்கும் மொத்தம் 3,007 கிலோ பூ கிடைத்துள்ளது.
பெரும்பாலும், இவரும் இவர் மனைவியுமே பறித்துவிடுவதாக கூறுகிறார். அதனால் அறுவடைக் கூலி கிடையாது. இவருடைய மொபெட்டிலேயே அதை _வில்லிபுத்தூர் பூ மார்க்கெட்டிற்கு கொண்டு செல்கிறார். சம்பங்கிப் பூவிற்கு தினமும் மார்க்கெட்டில் ஒவ்வொரு விலை வைப்பார்கள். கிலோ முப்பது ரூபாயில் இருந்து ஐநூறு ரூபாய் வரைக்கும் இவர் விற்கிறார்.
ஜ%ன் மாதம் வரை சம்பங்கியில் மார்க்கெட் கமிஷன் (100 ரூபாய்க்கு, 12 ரூபாய் 50 காசு) போக, 2 லட்சத்து 95 ஆயிரத்து 937 ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது. சராசரியாக ஒரு நாளைக்கு 16 கிலோ மகசூலும், கிலோவுக்கு சராசரி விலையாக 99 ரூபாயும் கிடைத்திருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 1, 584 ரூபாய். பருவ நிலையைப் பொருத்து ஒவ்வொரு நாளும் மகசூல் கூடிக் குறையும். அதே போல் மார்க்கெட்டிற்கு பூ வரத்தைப் பொருத்து விலையும் ஏறி, இறங்கும். எப்படிப் பார்த்தாலும் சராசரியாக ஒரு நாளைக்கு 1, 500 ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் கிடைக்கும் என்று நம்பிக்கையோடு சொல்கிறார் விஜயரங்கன்.

ஒரு வருடத்தில் வெங்காயம், சம்பங்கி இரண்டிலும் மொத்தமாக கிடைத்த வருமானம் 3 லட்சத்து 19 ஆயிரத்து 937 ரூபாய். இதில் 97 ஆயிரம் ரூபாய் செலவு போக 2 லட்சத்து 22 ஆயிரத்து 937 ரூபாய் லாபம். இப்பொழுது சம்பங்கியில் மகசூல் நன்றாக கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. இந்த ஜ%லை மாதம் 1-ம் தேதியில் இருந்து 16-ம் தேதி வரை 389 கிலோ பூ கிடைத்திருக்கிறது. அதை 33 அயிரத்து 590 ரூபாய்க்கு

விற்றிருக்கிறார். இதுவரை கிடைத்த லாபத்தைவிட, இனிமேல் அதிகமாக கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக கூறுகிறார்.

---

**தொடர்புக்கு**

**விஜயரங்கன்**

**செல்போன் : 94447-88004**